# தமிழ் நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

முதலாம் கடற்கரை சாலை, நாகப்பட்டினம் – 611 001.

முனைவர் மு. நாகூர் மீரான் பி.எச்டி.,
விரிவாக்கக் கல்வி இயக்குநர்,

தொலைபேசி : 04365 – 240 448
தொலை நகல் : 04365 – 240 449
இ மெயில் : dee@tnfu.ac.in
deetnfu@gmail.com


---

## செய்திக்குறிப்பு

வணக்கம்!

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக நிதியுதவியுடன் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் "அலங்கார மீன்வளர்ப்பு மற்றும் இனப்பெருக்கம்" என்ற தலைப்பில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மார்ச் 2018 ல் கொளத்தூர், சென்னை பகுதியில் நடைபெற உள்ளது. இப்பயிற்சியின் மொத்த கால அளவு 25 நாட்களாகும். இப்பயிற்சியில் ஐந்து நாட்கள் வகுப்பறைக் கல்வியும் மற்றும் 20 நாட்கள் களப்பயிற்சியும் மேற்கொள்ளப்படும். நகர்ப்புறங்களில் வளர்ந்து வரும் அலங்கார மீன் பண்ணை தொழிலில் செயல் திறன் கொண்ட பணியாளர்களுக்கு உள்ள தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக இப்பயிற்சி நடத்தப்பட உள்ளது. இந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சியில் குறிப்பாக பள்ளிக் கல்வியை கைவிட்ட ஆர்வமுள்ள ஆண் / பெண்கள் சேர்ந்து பயன்பெறலாம். இப்பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெறுபவர்களுக்கு தமிழக அரசு பயிற்சி சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சியில் சேருவதற்கு வயது வரம்பு 35க்கு கீழ் இருக்க வேண்டும். இப்பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளோர் தங்களது பெயர், வயது, சமூகப்பிரிவு, கல்வித்தகுதி, அஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி/தொலைபேசி ஆகிய தகவல் அடங்கிய விண்ணப்பத்தை பின்வரும் முகவரிக்கு மார்ச் 15ம் தேதிக்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

விரிவாக்கக் கல்வி இயக்குநர்,
தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்,
நாகப்பட்டினம் – 611 001.
தொலைபேசி எண்: 04365 – 240448 / 240449
மின்னஞ்சல்: dee@tnfu.ac.in, இணையதளம் : www.tnfu.ac.in

மு.நா. 05.01.18

**விரிவாக்கக் கல்வி இயக்குநர்**